Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.2, 2021, (97-103).

# சிலப்பதிகாரம் – கலைக்காப்பியமே

# SILAPPATHIKARAM IS AN ART EPIC

**Prof. R. Kasirajan (Rtd),**
Emiritus Professor,
Madurai Kamaraj University, Madurai.
tamizhinpan1004@gmail.com

**Dr.B.Sankareswari,**
Assistant Professor,
School of Tamil Studies,
Madurai Kamaraj University, Madurai.
sankaritamil@gmail.com

**Published:** 23 December 2021

**To cite this article (APA):** Kasirajan, R., & Sankareswari, S. B. (2021). *சிலப்பதிகாரம் – கலைக்காப்பியமே*. *Journal of Valartamil*, *2*(2), 97-103. https://doi.org/10.37134/jvt.vol2.2.8.2021

**To link to this article:** https://doi.org/10.37134/jvt.vol2.2.8.2021

**ஆய்வுச் சாரம்**: காப்பியம் என்ற இலக்கிய வகை, ஒரு வரலாற்றை, ஒரு காலக்கட்டத்தின் வாழ்வியலை, ஒரு சமூகத்தின் வரலாறு மற்றும் பண்பாட்டை, ஒரு சமயத்தின் தாக்கத்தை, தத்துவத்தின் ஆதிக்கத்தை, ஒரு காலக்கட்டத்தின் அரசியல் வரலாறு மற்றும் மாற்றத்தை வெளிப்படுத்தும் கருவியாக அமைந்தது. கவிஞரின் அற்புதக் கற்பனை ஆற்றலை, அவனின் பல்வேறுபட்ட ஆற்றலை - அறிவை - இலக்கிய ஈடுபாட்டை எடுத்துரைக்கும் வாகனமாகவும் இது அமைந்தது. இத்தகைய ஆற்றல் வாய்ந்த இப்படைப்பு, நாடு, இனம், மொழி மற்றும் கால வேறுபாட்டால் பலவகையாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது. சிலப்பதிகாரமது முன்முறைக்காப்பியம் (Primative epic or Oral epic) என்பதன் வளர்ச்சியே. முன்முறைக்காப்பிய (வாய்மொழி) மரபிலிருந்து வேறுபட்டது கலைக் காப்பியம் என்பதைச் சிலப்பதிகாரம் கொண்டு நிறுவலாம்.

**கருச்சொற்கள்**: இந்தியமொழிகள், இலக்கியம், காப்பியம், காப்பியமரபு, கலைக்காப்பியம், சிலப்பதிகாரம்.

**Abstract:** The literary genre of epic became an instrument for revealing a history, the biography of a period, the history and culture of a community, the influence of a religion, the dominance of philosophy, the political history and change of a period. It also served as a vehicle for the poet's marvelous imagination and his diverse energy-knowledge-literary involvement. Such a powerful work. Evolved in many ways by country, race, language and time difference. Silappathikarama is the development of the antecedent (Primative epic or Oral epic). It is arguable that intoxicants of choice the taste in Indian.

**Keywords:** Art Epic, Epic Tradition, Epic, Indian Languages, Literature, Silappathikaram

## முன்னுரை

காப்பியம் என்ற இலக்கிய வகை உலகச் செம்மொழி இலக்கியங்களில் பழமையானது. மிகப் பழமையான 43 மொழிகளில் (கி.மு. வில்); ஏறத்தாள 9 மொழிகளில் மட்டுமே காப்பியங்கள் கிடைத்துள்ளன. (பாபிலோனிய சுமேரியமொழி, கீப்ருமொழி, அரேபியமொழி, கிரேக்கமொழி, சமஸ்கிருதமொழி, பெர்சியன்மொழி, இலத்தீன்மொழி, சீனமொழி, தமிழ்மொழி முதலான மிகப் பழமையான மொழிகளிலும் காப்பியங்கள் இருந்திருக்க வாய்ப்புகள் மிகுதி; அவற்றைக் கண்டறிதல் வேண்டும். இந்தியமொழிகளில் தமிழ், சமஸ்கிருதம், தெலுங்கு, கன்னடம், மலையாளம், இந்தி, அஸ்ஸாம், உருது, ஒரியா, காஷ்மீரி, குஜராத்தி, பஞ்சாபி, வங்காளம், மராத்தி ஆகிய 14 மொழிகளில் காப்பிய இலக்கிய வகை உண்டு. மேலை மற்றும் கீழைநாட்டு மொழிகளில் 32- மொழிகளில் காப்பிய இலக்கிய வகை சிறப்பிடம் பெற்றுள்ளது (சிலம்பு செல்வராசு, 2013).

பழமையான இலக்கிய வகையான காப்பியம் வடிவாலும் காலமாற்றத்தாலும் மொழி வேறுபட்டாலும் பல பெயர்களையும் மாற்றங்களையும் பெற்றுள்ளன. இவற்றைக் குறிக்கும் பொதுவான சொல் 'EPIC' என்பது; இந்தியமொழிகளில் 'காப்பியம்'என்ற பொதுச் சொல்லாலும் வழங்கப்பட்டு வருகிறது. ஆங்கிலத்தில் இதன் அடிப்படைப் பொருள் சொல்லப்படுவது (Any thing to tell) இது 'EPO' என்ற கிரேக்கச் சொல்லின் அடியாகப் பிறந்தது. தமிழில் காத்து 'இயம்புதல்'என்ற பொருளில் பல சொற்கள் வழங்கி வந்துள்ளன. தொல்காப்பியம், பல்காப்பியம், காப்பியாற்றுக்காப்பியனார், காப்பியஞ்சேந்தனார் எனப் பல. இச்சொற்கள் கால மாற்றத்தால் பழமையான கதை தழுவிய ஓர் இலக்கிய வகையைக் குறிக்கத் தொடங்கியது. ஆங்கிலத்திலும் வடமொழியிலும்கூட இச்சொல் (Epic, காவ்யா) காலமாற்றத்தால் பழமை சார்ந்த ஒரு கதையைக் கதைத்தலைவனை மையமாகக் கொண்ட ஒரு வரலாற்றுப் படைப்பை அச்சொல் குறிக்க ஆரம்பித்தது.

## ஆய்வு நோக்கம்

காப்பியம் என்ற சொல் பலவகையாகப் பரிணாம வளர்ச்சி பெற்றது. அதன் இரண்டாவது நிலையே கலைக்காப்பியம் என்பது; அது முன்முறைக்காப்பியம் (Primative epic or Oral epic) என்பதன் வளர்ச்சியே. இதனைத் தொடர்ந்து வீரயுகக்காப்பியம், வீரயுகக்காதல் காவியம், காதல் காவியம் எனப் பல வடிவங்கலாக மாறின. வடமொழியிலும் இதிகாசம், மகாக்காவியம், காவியம்,

உத்பாத்யம், சம்புகாவியம், சந்தேசகாவியம், கண்டகாவியம் எனப் பல பெயர்களில் பல வடிவங்களில் மாற்றம் பெற்றன. தமிழிலும் காப்பியம், புராணக்காவியம், காப்பியச் சிதறல்களான சிற்றிலக்கியம், கதைப் பாடல் எனப் பலவகையாக வெளியாயின. இவற்றைச் சமூக அரசியல் காப்பியம், சமயக் காப்பியம் எனவும் வகைப்படுத்தலாம். சிலப்பதிகாரம் கலைக் காப்பியமே என்பதைத் தரவுகளின் அடிப்படையில் காண்பதே ஆய்வின் நோக்கமாகும்.

## ஆய்வு அணுகுமுறை

இக்கட்டுரையில் விளக்கமுறை அணுகுமுறையும் பிறமொழிகளோடு ஒப்பீடு செய்வதற்கு ஒப்பீட்டுமுறை அணுகுமுறையும் பயன்படுத்தப்பட்டுள்ளன.

## ஆய்வுப் பின்னணி

இவ்வகையில் தமிழில் தோன்றிய முதல் காப்பியம் முதன்மைக் காப்பியமான சிலப்பதிகாரமே ஓர் உன்னதமான கலைக் காப்பியம் ஆகும். மேலை இலக்கியத் திறனாய்வாளர்கள் குறித்த அத்தனை கோட்பாடுகளும் குறிக்கோள்களும் இதற்குப் பொருந்தும்.

## கலைக் காப்பியம்

முன்முறைக்காப்பிய (வாய்மொழி) மரபிலிருந்து வேறுபட்டது கலைக்காப்பியம். தொடக்கக் கால வாய்மொழிக் காப்பியங்களில் வீர தீரச் செயல்களே முக்கியத்துவமும் தலைமைச் சிறப்பும் பெற்றன. ஒருவகையில் வீரயுகப்பாடலாகக் கருதப்பட்டாலும், நடைச்சிறப்பு, கதைத் தன்மை, கதைப் பரப்பு – இவைகளால் அது வேறுபட்டது. இதில் சிந்தனை ஓட்டம், அழகுணர்ச்சி சிறப்பாக அமைந்தாலும், குறிக்கோள் நோக்கம் இருக்காது. ஆயின், கதைப் பின்னல் மிகச் சிறப்பாக அமையும். வீரயுகச் செயல் அல்லது வரலாற்றுப் பழங்கதை வாய்மொழியாக – எழுதிவைக்கப்படாது பாராயணமாகச் சொல்லப்பட்டு வருவதால், இது வாய்மொழிக் காப்பியம் எனப்பட்டது. இவை படிப்பதற்காக இயற்றப்பட்டவை அல்ல. நினைவாற்றல் மூலம், புலவருக்குப் புலவர், மரபு வழியாகத் தலைமுறை தலைமுறையாகச் சொல்லப்பட்டு வருவது. நடையில் எளிமையும் வலிமையும் மிக்கது. நேர்கூற்றாக அமைவது. கதைக்கூற்று

முறையிலும், நிகழ்ச்சிகளை விவரிப்பதிலும் தெளிவுமிக்கது. தொடக்கக் கால வரலாற்றாக நம்பப்படுகிற ஒரு கதையை நாட்டு வழக்கு நடையில் கேட்டு மகிழ்வதற்காக எழுதப்படுவது.

இத்தகைய முன்முறைக்காப்பிய அடித்தளத்திலிருந்து வளர்ந்து வந்தவையே கலைக்காப்பியம். கால, பண்பாட்டு, கலை வளர்ச்சியின் செல்வாக்கால், இவை வேறுபட்டுப் புதிய பாத்திரப் படைப்புக்களோடு புலமைக் கவிஞனால் பிரதிகளில் எழுதி வைக்கப்படுவது. இயல்பான நடையில் அமையாது, கலைத் தன்மை மிக்க விழுமிய நடையில் அமைவது. கவிதைச் செறிவிலும், தெளிவான, பொருத்தமான, உணர்வுப்பூர்வமான சொல் தேர்வு முறையிலும், சொற்றொடர் - வரியமைப்பு – பத்திப் பிரிப்பு – இவற்றில் வளமையும் பெற்று அமையும். இதன் கதைக்கரு ஒரு தலைமையின் கீழ் அடக்கி ஆளப்பட்ட நாகரிக வளர்ச்சிப் பெற்ற சமுதாயத்திலிருந்து கொள்ளப்படுகிறது. இச்சமூகச் சூழலும், நேரடியாக விளக்கப்படாமல், பாத்திரங்களின் அன்றாட வாழ்வின் ஒரு பகுதியாக விளக்கம் பெறும். இக்கலைக் காப்பியம் படித்து மகிழ்வதற்காகவே எழுதப் பெறும். வாய்மொழிக்காப்பியம் போன்று நேரடியாகவும் உடனடியாகவும் சுவைஞனுக்கு மகிழ்ச்சி ஊட்டுவதில்லை. ஆழ்ந்த ஈடுபாட்டுடன் அமைதியாக இருந்த ஒருமித்த உணர்வுடன் கற்றல் மட்டுமே இவற்றின் பொருட்செறிவை உணர முடியும். அத்தகை ஆற்றலும் கவிஞனின் சொல்லாட்சி ஆழ்ந்த செறிவுமிக்கதாக அமையும்.

## பாத்திரப் படைப்புகளில் குறியீடு

கலைக்காப்பியத்தில் வீரர்களே காப்பியத் தலைவர்களாக அமையினும், அவர்கள் வீரயுகச் சமுதாயத்தைச் சார்ந்தவர்கள் அல்லர். மானுடவியலின் உயிர்நிலையாக அமைவர். இங்குத் தனிமனிதன் ஓர் இனக்குழுவின் குறியீடாகவோ ஒரு குறிக்கோள் உடையவனாகவோ படைக்கப் பெறுகிறான். இங்குப் பல பாத்திரங்கள் இடம் பெற்றாலும் ஒவ்வொன்றும் தனித்துவம் பெற்றுச் சிறக்கும். ரோமப் பேரரசின் குறியீடாக ஏனியரும் போர்ச்சுக்கீசியரினக் குறியீடாக வாஸ்கோடகாமாவும் கிறிஸ்தவ வீரர்களின் குறியீடாகக் "கேப்ரடோவும்" மனிதத்துவத்தின் குறியீடாக ஆதாமும் பெண் தெய்வ வழிபாட்டின் குறியீடாகக் கண்ணகியும் அமைவது போன்று, கலைக் காப்பிய மாந்தர் படைக்கப்படுவர்.

கலைக்காப்பிய ஆசிரியர் ஏதாவது ஒரு தத்துவத்தை நல்லறத்தை அல்லது உலகியல் உண்மை நோக்குடன் தம் படைப்பை அமைப்பர். இங்கு வரும்

பாத்திரங்கள், மனிதன் எப்படி இருக்க வேண்டும், மனித வாழ்வின் இலட்சியம் எப்படி அமைய வேண்டும் என்பதற்கு எடுத்துக்காட்டாக அமையும். இவர்தம் ஒவ்வொரு அசைவும் நற்பண்பையும் இருட்பண்பையையும் பதிவு செய்யும். இவரது வாழ்க்கை, வாசகருக்கு ஒரு படிப்பினையைக் கற்பிக்க வேண்டும்.

## கலைக்காப்பியங்களின் தோற்றப் பின்னணி

ஒரு நாடு உன்னத நிலையில் முழு வளர்ச்சி பெற்ற காலத்திலோ அதன் இறுதிக்காலத்திலோ அதன் பின் விளைவுக்காலத்திலோ கலைக்காப்பியங்கள் தோன்ற வழியில்லை. காலம் காலமாகப் பரிணாம வளர்ச்சி பெற்று வந்த வரலாற்றுச் சிறப்பு மிக்க நாட்டின் அரசியல், கலை, சமயம், சமூகம் முதலான சிதைவுற்ற அல்லது மாற்றம் பெற்ற காலத்திலேதான் கலைக்காப்பியங்கள் தோன்றும். இவற்றில் கதைக்கு அதிகமுக்கியத்துவம் கிடையாது. அந்நாட்டின் வரலாற்றுப் பரிணாம வளர்ச்சி முழுவதையும் கொண்டு வந்து வாசகனுக்கு ஓர் எழுச்சியுணர்வை ஏற்படுத்த வேண்டும். காப்பியம் எழுதுவதற்குக் கற்பனை இயல்கவிதை இயக்கமும் (Romanticsm)அடிப்படைக் காரணம் எனலாம்.

இக்கலைக்காப்பியக் கொள்கையைக் கொண்டு பார்க்கிறபோது தமிழில் தோன்றிய சிலப்பதிகாரமும் இலத்தீன்மொழியல் தோன்றிய வெர்ஜிலின் 'ஏனியட் ' காப்பியமும் இத்தாலிமொழியல் தோன்றிய தாந்தேயின் தெய்வீக இன்பியல் காப்பியமும் குறிப்பிடத்தக்கன. இவற்றின் குறிக்கோள் மட்டுமே இங்கு ஒப்பிடப்படுகின்றது.

ஒரு கலைக்காப்பியத்தின் நோக்கம் அல்லது குறிக்கோள் தேசிய முக்கியத்துவம் வாய்ந்ததாக அமைய வேண்டும். இவ்வகையில், சிலப்பதிகாரம் ஏன் எழுந்தது. அதன் இலட்சியம் என்ன? ஏன் சங்கக் காலத்தில் இது போன்ற காப்பியங்கள் தோன்றவில்லை? என்பனபோன்ற கேள்விகளை முன் வைக்கின்றபோது நமக்குச் சில உண்மைகள் புலனாகும்.

## சிலம்பு ஒரு கலைக் காப்பியம்

சங்கக் காலம் வீரயுகக்காலம், அது ஒரு வளர்ச்சியடைந்த உன்னதச் சமுதாயம் – சமய - சமூக அரசியல் நிலையில் அக்காலத்தே கலைக்காப்பியம் தோன்ற வழியில்லை என்று சி.எம். பௌராவின்(1952) கருத்து இங்குக் குறிப்பிடத்தக்கது. சிலம்பின் காலம் சங்கச் சமூகம் சிதைவுற்ற காலம், அரசியலில் ஒரு நிலையான அரசு இருந்ததில்லை, சங்கப் பின்னடைவுக் காலத்தில் மூவேந்தரும் ஒருமைப்பாட்டுணர்வுடன் இருந்ததில்லை. ஒருவருக்கொருவர் நாடு பிடிக்கும் அளவில் சண்டையிட்டுக் கொண்டிருந்த காலம் சமயநிலையிலோ, சங்க காலம் ஒரு சமயம் சார்ந்த சமூகமாக வளர்ச்சியடைந்திருந்தது. இங்குத் திருமால், சிவன் மற்றும் நடுகல் வழிபாடுகள் காணப்பட்டாலும் சமயப் போராட்டம் இல்லாது ஒற்றுமையுணர்வுடன் வாழ்ந்த ஒரு சமூகம். சிலம்பின் காலமோ சமணம், பௌத்தம், ஆசீவம், சாங்கியம், வைதீகம் முதலான சமயங்கள் தம்முள் ஆதிக்கப் போராட்டம் நிகழ்த்திய காலக்கட்டம். சமூக நிலையிலோ சாதிப்பிரிவுகள் தோன்றி அந்தணர் உயர்நிலைக்குத் தூக்கி வைக்கப்பட்டனர். இப்படிப்பட்ட சமூக, சமய, அரசியல் சீர்கேடுகளினால் நலிந்த தமிழ்ச்சமூகத்தை மீட்டுருவாக்கம் நோக்கில், 'கண்ணகி வழிபாடு மூலம் மூவேந்தர்களையும் அண்டை நாட்டு மன்னர்களையும் ஒருங்கிணைக்கிறார். புகார், மதுரை, வஞ்சிக்காண்டம் என அமைத்துத் தமிழகத்தின் முப்பெரும் நாட்டுப் பிரிவினையை இணைக்க முயற்சி மேற்கொள்கிறார். சேரன் செங்குட்டுவன் இமயவெற்றி மூலம் காழ்ப்புணர்வு கொண்ட ஏனைச் சோழ, பாண்டிய மன்னர்களைச் சமாதானம் செய்கிறார். சமயநிலையிலும் சமண, பௌத்த, வைதீகச் சமயத்தை பெண் தெய்வ வழிபாட்டு (கண்ணகி தெய்வம்) மூலம் ஒரே சமய வழிப்பாட்டை முன்வைக்க முனைகின்றார்.

## முடிவுரை

சிலப்பதிகாரம் ஒரு தேசிய உணர்வுடன் நாடு, நகர், வேந்தர், சமயம், சமூகம் ஆகிய அனைத்தையும் ஒருங்கிணைத்துப் பழைய சங்கச் சமூகத்தை மீட்டுருவாக்கித் தமிழர்தம் எதிர்காலவாழ்வியலை முன்னெடுத்துச் செல்லும் முயற்சிக்கு அடித்தளம் வகுத்துள்ளார் இளங்கோ. இதுமட்டுமின்றித் தமிழகத்திலுள்ள பல்வேறு வழிபாட்டு மரபுகளையும் சடங்குமுறைகளையும் விருப்புவெறுப்பின்றிச் சமநிலையில் (வேட்டுவவரி, ஆய்ச்சியர்குரவை, குன்றக்குரவை, சாரணர் வழிபாடு) என எடுத்தியம்புகின்றார். எடுத்துக் கொண்ட

Journal of Valartamil, eISSN 2821-3157,
Volume 2, No.2, 2021, (97-103).

பாத்திரங்களையும் சமணம், பௌத்தம், சாங்கியம், வைதீகம் சார்ந்தவைகளாகக் காட்டுவதும் அவர்தம் சமய நோக்கைத் தெளிவுபடுத்தும். காப்பியம் அரச – வணிகவர்க்கப் போராட்டமாக உருவகப்படுத்தப்பட்டாலும், இங்கு அந்தணர் சமூகம், வேட்டுவர், அய்ச்சியர், மலைவாழ்குறவர், சமயச் சான்றோர், பரத்தையர் சமூகம் எனப் பலவற்றையும் முன்னிலைப்படுத்துவதும் சிலம்பை ஒரு தேசியக்காப்பிமாக உயர்த்திவிடுகிறது. எனவே சிலப்பதிகாரம் ஒரு கலைக்காப்பியமே என்பதை நம்மால் அறிய முடிகிறது.

## REFERENCES

Arunachalam, P. (1971). *Silappathikara Chinthanai*, *Varalatru Nilaiyil Oru Aivu*, Chennai: Tamil Puththakalayam.

Bowra, C.M. (1952). *Heroic Peotry*, Osmania: Macmillan and Company limited.

Kailasapathi, K. (1969). *Oppiyal Ilakkiyam*, Chennai-1: Pari Nilaiam.

Maanikanar, V.S. (2010). *Irattai kapiyangal*, *Kappiya Parvai*. Trichy: Saratha Pathipagam.

Mathivana, R. (2005). *Silambin Kalakanippu*, Chennai: Sekar Pathippakam.

Natarajan, T.S. (2015). *Silappathikaram Maruvasippu*, Chennai: NCBH.

Palan, S. (2019). *Silampu Saalai*, Chennai: Vanathi Pathippakam.

Pandurangan, A. (1992). *Kappiya Iyal*. Chennai: UniQue Media – Integrators.

Parththasarathi, K. (2009). *Silampil Arumpiya Sinthanai Pookkal*, Kowra Pathippaka Kulumam.

Ramakrishnan, S. (1982). *India Panpadum Tamilarum*, Madurai: Meenakshi Puththaka Nilaiyam.

Seenivasan, R. (1997). *Silappathikaram Moolamum Thiranaivum*, Chennai: Aniyagam Publication.

Selvaraj, (2013). *Silappathikaram*, (Kavithaiyial, Panpattial, Mozhiyial Arasial), Pandichery Lingustics Research Department.

Silampu, N. Selvarasu, (p). (2013). *Silapathikaram* (kavithaiyiyal) - Panpaaatiyal - Mozhiyiyal - *Arasiyal*, Pondicherry Linguistics Research center.

Sivanganam, M.P. (1973). *Silappathigara Thiranaivu*, Alakai Amman Pathippagam.